RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s73

OPEN ACCESS

# கவிஞர் மு. மேத்தாவின் ஆகாயத்துக்கு அடுத்தவீடு கவிதைத் தொகுப்பில் இராமாயணக் குறியீடு

## கு. ஜெயசித்ரா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), மதுரை-625002, தமிழ்நாடு, இந்தியா.

# The symbol of Ramayana in Mu. Mehta's collection of poems 'Agaayathukku Aduttha Veedu'

## G. Jeyachitra [a, *]

[a] Department of Tamil, Sri Meenakshi Government College for Women, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author: guruchithraphd@gmail.com

Received: 13-12-2021
Revised: 14-04-2022
Accepted: 16-04-2022
Published: 18-06-2022

Check for updates

### ABSTRACT

Feminist ideas emerged in the late 18th century, and following the feminist movement in India, too, womanist ideas emerged and flourished. Feminist literature also arose in connection with it. In Tamilnadu also, literature related to feminism is emerging and gaining widespread attention. In the history of Tamil literature, Poet Mu. Mehta was one of the most important creators who contributed to the spread of the renewed form of poetry, known as unconventional poetry. Poet Mu. Mehta is also credited with inspiring innumerable young people to innovate. Poet Mu. Mehta's 'Kanneer Pookkal' (Tear Flowers) is a book that has been published over 40 editions.

**Keywords:** Feminism, Poet Mu. Mehta, Agaayathukku Aduttha Veedu, Symbol of Ramayana, Cultural structure, Infiltration

## முன்னுரை

18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பெண்ணுரிமைச் சிந்தனைகள், மற்றும் பெண்ணுரிமை இயக்கங்களைப் பின் தொடர்ந்து இந்தியாவிலும், பெண்ணியச் சிந்தனைகள் தோன்றி வளர்ந்து வந்தன. அதன் தொடர்பாக பெண்ணிய இலக்கியங்களும் முகிழ்ந்து எழுந்தன. தமிழகத்திலும் பெண்ணியம் தொடர்பான இலக்கியங்கள் தோன்றி பரவலான கவனத்தைப் பெற்று வருகின்றன (Rajendran & Packiamuthu, 2022). பெண்ணியத்தின் அடிப்படையில் இலக்கியங்கள் தோன்றி எழுவதை முனைவர் அரங்க மல்லிகா "பெண்ணியம் பெண்ணின் சமூக நிலையை மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. இது ஆணிய பண்பாட்டுக் கட்டமைப்பில் பாலிய உருவாக்கம் ஊடுறுவியிருப்பதையும், அதனால் பழைய மதிப்பீடுகள், புதிய பண்பாட்டு மதிப்பீடுகள் எத்தகைய மாற்றத்தைப் பெறுகின்றன என்பதையும் அறிய உதவுகின்றது". இவற்றைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், காவியங்கள், புராணங்கள், நவீன இலக்கியங்கள் ஆகியவற்றில் வைத்து எண்ணிப் பார்க்க முடிகின்றது. என்று குறிப்பிடுவதைக் காண முடிகின்றது (Mallika, 2008).

குறிப்பாக மரபை மீறிய புதுக்கவிதை எழுத்தாளர்களான ஆண், பெண் படைப்பாளர்களிடம் வேறுபாடின்றி பெண்ணியப்படைப்புகள் வெளிவருகின்றன (Selvakumaran, 2021). அதில் குறிப்பிடும் படியான எழுத்தாளர் கவிஞர் மு. மேத்தா. அவர் தம் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள் நிறையவே காணப்படுகின்றன. 2004 ஆம் ஆண்டு தானெழுதிய ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்னும்

கவிதைத் தொகுப்பிற்காக சாகித்ய அகாடமி விருதும் பெற்றிருக்கிறார். அத்தொகுப்பில் இடம்பெற்ற இராமாயணம் தொடர்பான கவிதை இங்கு பெண்ணிய நோக்கில் ஆய்வு செய்யப்படுகின்றது (Metha, 2012).

## இராமாயணத்தைக் குறியீடாக்கும் இலக்கிய உத்தியும் தமிழ்க் கவிதைகளும்

நவீனப் புதுக்கவிதைப் படைப்பாளர்களின் கவிதைகளில் பாடு பொருள்கள், மரபிலக்கிய வாதிகளின் பாடு பொருள்களிடமிருந்து வேறுபட்டு நிற்கின்றன. குறிப்பாக இதிகாசக் கதாப்பாத்திரங்களைக் குறியீடாக்கி கவிதை படைப்பது ஒரு இயக்கமாகவே வளர்ந்ததைப் பார்க்க முடிகிறது.

“தமிழ் நிலத்தைப் பொறுத்தமட்டில் மகளிர் பற்றிய பார்வைகள் வெவ்வேறு கோணங்களில் இலக்கிய, இலக்கணங்களில் இடம்பெற்றுள்ளன. பழந்தமிழ் இலக்கியத்தில் பெண்மைக்கான இடத்தை ஆய்வதில் பலரும் ஈடுபட்டு வருகின்றனர். தமிழ்ப் பெண்ணியம் பண்டைய இலக்கியங்களில் தென்படுமாற்றை அலச வேண்டியுள்ளது” என்று கூறும் அறிவு நம்பியின் கூற்று மிக முக்கியமானது (Arivu Nambi, 2008). இப்பண்பை இலக்கியக் கவிதைகளோடு நவீனக் கவிதைகளையும் ஒப்பாய்வு செய்வது பெண்ணியம் படைப்பாளர்களின் பங்களிப்பை அறிய முடியும்.

அதன் அடிப்படையில் பார்க்கும் போது கவிஞர் புவியரசு அனைத்து இதிகாசக் கதாப்பாத்திரங்களையும் விமர்சனப்படுத்துவதைப் பாருங்கள் (Puviarasu, 1981).

“பாண்டவர் சூதால் நிராகரிக்கப்பட்டு
துச்சாதனக் கருணையால் தழுவப்பட்ட
பாஞ்சாலிகளின் கூலியுழைப்பு
மாளிகை தோறும் எங்கள் நாட்டில்.
விசுவாமித்தரக் கடன்களால் விலைப்பேசப்படும்
அரிச்சந்திரர்களின் அடிமைச் சந்தைகள்
சேரிகள் தோறும் எங்கள் ஊர்களில்.
இந்திரக் காதலால் கைவிடப்பட்டுக்
கௌதம வறுமையால் சபிக்கப்பட்ட
அகலிகைகளின் அக்கினிப் பிரவேசம்
தினமும் எங்கள் தெருவில்.
இராம மோகங்களால் மறக்கப்பட்டு
இராவணக் காமங்களால் செதுக்கப்படும்
சீதைகளின் கல்படிமங்கள்
கணமும் எங்கள் வீடுகளில்”

என்று புவியரசு அவர்கள் “பாரதப் பெண்ணியம்” என்ற தலைப்பில் அனைத்து இதிகாசப் பெண் கதாப்பாத்திரங்களை நவீனப் பிரச்சினைகளுடன் ஒப்பிட்டு கவிதை புனைந்துள்ளார். ஒரு சில கவிஞர்கள், இராமாயணக் கதாப்பாத்திரங்களை மையமிட்டு படைப்புகளைப் படைத்துள்ளனர்.

இப்படியான கவிதைப் படைப்புகள், புராணக்கதாப் பாத்திரங்களை மிவுகம் உயர்வாகச் சித்தரித்து தற்காலப் பெண்களின் நிலைமையை சோகமாகச் சித்தரிக்கின்றன. அப்துல்ரகுமான் தன் “பால்வீதி” என்னும் கவிதை நூலில்.

“மாயமான்களின் மோகத்தில்

இராவணர்களிடம்

சோரம் போகும்

சீதைகள்”

என்று நவீனப் பெண்களின் நிலையை இராமாயணச் சீதையின் உயர்ந்த தன்மையோடு ஒப்பிட்டு சீதையைக் குறியீடாக்குகின்றார் (Abdul Rahman, 1980).

இதற்கெல்லாம் ஒருபடி மேலேபோய் கவிஞர் வைரமுத்து தனது “இன்னொரு தேசிய கீதம்” என்ற கவிதைத் தொகுப்பில்

“இந்த

வரதட்சனை வில்லை

வளைப்பது யார்?

ராமர்களுக்கு இன்று

ரத்த மில்லை

ஜனகனோ பாவம்

சாய்வு நாற்காலியில்.

இனி நாமே ஒடிப்பதே

நியாயம்

எங்கே சேருங்களேன்

சீதைகளே”

என்று வைரமுத்து எழுதுவதில், இன்றைய ஆண்களுக்கு அன்றைய இராமனுக்கிருந்த வீரம் போல், இல்லை என வருத்தப்படுவதுடன் இன்றையப் பெண்கள், இதை உணர்ந்து தன்னை தகவமைத்துக் கொண்டு போராட முன்வரவேண்டும் என்கிறார் (Vairamuthu, 1994). அதே வேளையில் தனது “திருத்தி எழுதிய தீர்ப்புகள்” என்னும் கவிதைத் தொகுப்பில்

“ஏடி அகலிகை

எப்போதடி பெண்ணாவாய்...!

கானகத்தில்

அன்று

கதைக்கல்லாய்க்

கிடந்த நீ

சமூக சந்நிதியில்

இன்று

சதைக்கல்லாய்க் கிடக்கிறாய்”

என்று வைரமுத்து எழுதுவதைப் பார்க்கமுடிகிறது (Vairamuthu, 1982).

ஒருசில கவிஞர்கள் இராமனையே குற்றவாளியாக்குவதையும் பார்க்க முடிகிறது. மரபுக் கவிதை ஆளுமையான மரபின் மைந்தன் முத்தையா

"கல்லாய்க் கிடந்த அகலிகையும் - உன்
கால்துகள் பட்டதும் பெண்ணானாள்
முள்ளய் முளைத்த தாடகையும் - உன்
மோதுகணை பட்டேன் மண்ணானாள்?
நாத மொழிகேட்ட சபரியுமே - உனை
நேர்கொண்டு பார்த்ததில் வீடுபெற்றாள்
காதல் மொழிசொன்ன சூர்ப்பநகை - உன்
கண்களில் பட்டென் பாடுபட்டாள்
காதல் நெருப்பில் சிலகாலம் - கொடுங்
காட்டு நெருப்பினில் சிலகாலம்
ஆதரவில்லாமல் இலங்கையிலே - மண்ணில்
அச்ச நெருப்பினில் சிலகாலம்
கற்பின் பெருங்கனல் சானகியும் - அய்யோ
கண்ட துயரங்கள் பார்த்துவிட்டாய்
அற்புதப் பெண்ணவள் வாடும்படிநீ
அக்கினி யில்இட்டு வாட்டிவிட்டாய்"

என்று எழுவதில் இதனைப் பார்க்க முடிகிறது (Muthaiah, 2018). இதுவரை பார்த்த கவிஞர்களில் கவிஞர் புவியரசு அனைத்து இதிகாசக் கதாப்பாத்திரங்களையும் விமர்சிப்பதையும், கவிஞர் அப்துல்ரகுமான் இராவணர்களிடம் சோரம் போகும் இன்றைய சீதைகளின் பிரச்சனைகளை மட்டும் சொல்வதையும், கவிப்பேரரசு வைரமுத்து, அன்றைய இராமனுக்கிருந்த வீரம் போல் இன்றைய இராமர்களுக்கு இல்லை என்று ஏக்கப்படுவதையும், மரபின் மைந்தன் முத்தையா, இராமனைக் குற்றவாளியாக்குவதையும் பார்க்க முடிகிறது.

## வேறுபடும் கவிஞர் மு. மேத்தா

பெண்களின் தற்கால இராமாயணக் குறியீட்டுக் கவிதைகள் எல்லாம் பிரச்சினையைக் கூறுவதாகவே உள்ளதைப் பார்க்கமுடிகிறது. ஆனால் மேத்தா இதற்கான தீர்வாக இராமாயண நிகழ்வொன்றை வைத்தே ஒரு முடிவைச் சொல்வதையும் ஆய்வு ரீதியாகப் பார்க்க முடிகிறது.

மேத்தாவின் ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்ற தொகுப்பின் கவிதையொன்றில்

"பறவைக்கு சமாதி
சிறகுக்கு விடுதலை
இதுவா
பாரத தேசம்?

என்று கூறிவிட்டு, போராட்டம் ஒன்றே தீர்வு என்பதை,

"நாம்
இலங்கையைச் சுட்ட
தீயின் சொச்சம்"

என்று பாடும்பொழுது ஒரு தீர்வை சொல்லுவதைக் காண முடிகிறது (Metha, 2012). நம்மை இலங்கையை எரித்த அனுமனின் தீயின் சொச்சம் என்று, இராமாயண காப்பிய நிகழ்வைக் குறியீடாக்கி நமக்கு உணர்ச்சி வேகத்தைக் காட்டி ஒரு தீர்வை வழங்குகிறார். கவிஞர் மேத்தா என்பதையும் உணர முடிகிறது. இத்துடன் சிலப்பதிகாரத்தில் கண்ணகி மதுரையே எரித்ததையும் குறியீடுதாக்குவதைக் காணமுடிகிறது.

"நாம்

மதுரையை

எரித்த நெருப்பின் மிச்சம்"

என்னும் கவிதையே சிலப்பதிகார குறியீட்டு கவிதையாகும்.

## முடிவுரை

நவீனப் புதுக்கவிஞர்கள் இராமாயணக் கதாப்பாத்திரங்களை மையமாக வைத்து, இன்றையப் பிரச்சினைகளைச் சித்தரிப்பதைப் பார்க்க முடிகிறது. ஆனால், கவிஞர் மு. மேத்தா மட்டுமே ஆகாயத்துக்கு அடுத்த வீடு என்று சாகித்ய அகாடமி விருது பெற்ற தனது கவிதைத் தொகுப்பில் நம்மை இலங்கையை எரித்த நெருப்பின் சொச்சமாக்கி ஒரு தீர்வைச் சொல்கிறார் என்பதை ஆய்வு ரீதியாக உணர முடிகிறது.

## References


Abdul Rahman, S., (1980) Paalveethi, Akaram Publications, Chennai, India

Arivu Nambi, A., (2008) Tamil Kavithaigalil Penniyam, New Century Book House Pvt. Ltd, Chennai, India.

Mallika, R., (2008) Tamil Kavithaigalil Penniyam, New Century Book House Pvt. Ltd, Chennai, India

Metha, Mu., (2012) Agaayathukku Aduttha Veedu, Kavitha publications, Chennai, India

Muthaiah, M., (2018) Marabin Maindan Poems, Namadhu nambikai Publications, Coimbatore, India

Puviarasu, (1981) Idhu Dhaan, Vanampadi Publications, Coimbatore, India

Rajendran, V., Packiamuthu, A., (2022).Feminism in the view of tamil women writers, International Research Journal of Tamil, 4(SPL 1), 147-152. https://doi.org/10.34256/irjt22s120

Selvakumaran, S., (2021) Feminist thought in the poems of modern women poets, International Research Journal of Tamil, 3(4), 122-129. https://doi.org/10.34256/irjt21415

Vairamuthu, (1982), Thiruththi Ezhuthiya Theerppugal, Kalaignan Padhipagam, Chennai, India

Vairamuthu, (1994) Innoru Desiya Geetham, Surya Literature Pvt. Ltd, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License